ஆகஸ்ட்,
1949

அம்புலிமாமா

விலை
6 அணா

பாலர் கதைகள் மாதப் பத்திரிகை





சுயராஜ்யத் தேர்

பூமியிலிருந்துள்ள செல்வம்

இரும்பு

[illegible]

[illegible]

[illegible]

அடுத்த இதழில் வேறொரு பொருளைப்பற்றி [illegible]. இந்த [illegible] புத்தகத்தில் சேகரித்து வைக்கவும்.

501 SPECIAL

HAMAM

வெளியிடுபவர்கள் : ஹமாம் & 501 சோப்பு தயாரிப்பாளர்களாகிய

டாடா ஆயில்மில்ஸ் கம்பெனி லிமிடெட்

அம்புலிமாமா
பொருள் அடக்கம்

விஷயம் பக்கம்

அம்புலிமாமா ஆபீஸ்
போஸ்ட் பாக்ஸ் நெ. 1686
சென்னை-1



தம்பிகளே, தங்கைகளே!

நீங்கள் எழுதும் கதைகள் இரண்டு பக்கங்களுக்கு மேல் இருக்கக்கூடாது. தெளிவாகத் தெரியும்படி வெள்ளைக்காகிதத்தில் எழுதி அனுப்பலாம். பென்சிலினால் எழுதக்கூடாது. சிலர் கதைகளுடன் போதுமான ஸ்டாம்பை வைக்காமலேயே என் கதை என்னவாயிற்று? எப்போது பிரசுரிக்கிறீர்கள்? என்று கேட்கிறார்கள். நீங்கள் கதைகள் அனுப்பும்போது சரியாகப் பார்த்து அனுப்புங்கள். இது உங்களுக்குத் தெரிந்த விஷயம்தான். ஆனால் நீங்கள் இதை அடிக்கடி மறந்துவிடுகிறீர்கள்.

இனிமேலாவது உஷாராக இருப்பீர்கள் அல்லவா!

—ஆசிரியர்.

மேன்மையான கைத்தறி ஆடைகள்



குடும்பத்தின் சகல தேவைகளுக்கும்









புடவைகள் - வேஷ்டிகள் லுங்கிகள் - பின்னலாடைத் துணி கள் - சட்டைத் துணிகள்.

எங்கள் கைத்தறி ஜவுளிகள் சென்னையிலும் இதர முக்கிய நக ரங்களிலுமுள்ள எங் விற்பனை ஸ்டோர்களிலும் கிடைக்கும்

மதராஸ் கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு சங்கம் லிமிடெட்



[illegible] 2 | ஆகஸ்டு 1948 | [illegible] 2

தேசியப் பண்டிகை

குழந்தைகளே! நமக்கு அனேக பண்டிகைகள் இருக்கின்றன. பொங்கல், தீபாவளி, தசரா, கிரிஸ்துமஸ், ரம்ஜான் என்று பல வகையான பண்டிகைகள் இருக்கின்றன. இவைகளை எல்லாம் ஒரே மதத்தினர்கள் கொண்டாட மாட்டார்கள். இந்துக்கள் பொங்கல், தீபாவளி ஆகிய பண்டிகைகளையும், கிருஸ்துவர்கள் கிரிஸ்துமஸ் முதலிய பண்டிகைகளையும், மகம்மதியர் ரம்ஜான் முதலிய பண்டிகைகளையும் கொண்டாடுவார்கள். ஆனால் எல்லா மதத்தினர்களும் ஒன்று சேர்ந்து கொண்டாடும் ஒரு பெரிய

பண்டிகை இருக்கிறது. அது என்ன என்று உங்களுக்குத் தெரியுமா! நம் இந்தியாவின் சுதந்திர தினப் பண்டிகையைத்தான் சொல்லுகிறேன்.

சென்ற வருஷம் ஆகஸ்டு 15-ம் தேதியன்று நம் இந்தியா சுதந்திரம் அடைந்தது. அன்று நாம் எல்லோரும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் சுதந்திரதினத் திருவிழாவைக் கொண்டாடினோம். மீண்டும் நாளை ஆகஸ்டு 15-ம் தேதியன்று அந்தத் திருவிழாவைச் சிறப்புடன் கொண்டாடப் போகிறோம்.

பாலர்களே! இந்தியாவின் விடுதலைக்காகத் தங்கள் உயிரையே தியாகம் செய்தவர்களில் லோகமான்ய பாலகங்காதர திலகர், மகாத்மா காந்தி ஆகியவர்கள் மிகவும் முக்கியமானவர்கள். நமது சுதந்திரப் பண்டிகையின் உற்சாக சமயத்திலே இவர்களின் புனித நாமதேயங்களை நாம் ஸ்மரிக்க வேண்டும். அவர்கள் செய்திருக்கும் தியாகத்தில் நாம் குறைந்தபக்ஷம் நூற்றில் ஒரு பங்கையாவது செய்து தீர வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையான பாரத மக்களாக விளங்க முடியும்.

இன்று நாம், நமது பாரதநாட்டின் சுதந்திர மக்களாக ஆகிவிட்டோம். நமது அரசாங்கத்தைப் பிரதமர் நேருஜீ அவர்கள் வெகு நேர்மையுடன் நடத்திக்கொண்டு வருகிறார். அவருக்குத் துணையாக சர்தார் வல்லபாய் பட்டேலும் இருக்கிறார். அவர்கள் நம் பாரத நாட்டின் தவப் புதல்வர்களாக, நீடூழி வாழ வேண்டுமென்று நாம் எல்லோரும் இறைவனைத் துதிப்போமாக!

ஜெய் ஹிந்த்

புத்திகெட்ட புலி

ஒரு குடியானவன் தன் நிலத்தை உழுதுகொண்டிருக்கும் சமயத்திலே, ஒரு புலி அவனிடம் வந்து "நீ ஷேமமாக இருக்கிறாயா?" என்று கேட்டது.

குடியானவன் புன் சிரிப்புடன் "ஆம், ஷேமம்தான்" என்றான்.

"ரொம்ப சந்தோஷம், கடவுள் என்னை இங்கே அனுப்பினார். உன்னிடம் இருக்கும் இரண்டு மாடுகளையும் எனக்குக் கொடுத்துவிடும்படி உத்திரவிட்டிருக்கிறார். ஆகையால் உன் மாடுகளை இப்போதே கொடுத்துவிடு" என்று புலி கேட்டது.

இதைக் கேட்டு குடியானவன் திடுக்கிட்டான். சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தான். புலியைப் பார்த்து "புலி மகாராஜே! நானோ ஏழை. என் நிலத்தை உழுது பிழைக்க எனக்கு இருப்பதோ இந்த இரண்டு மாடுகள்தான். நான் என்ன செய்வேன்? என் வீட்டில் மட்டும் ஒரே ஒரு பசு இருக்கிறது. வேண்டுமானால் அதைக் கொண்டுவந்து கொடுக்கிறேன்" என்று பயமாகக் கேட்டுக் கொண்டான்.

அவன் சொன்னதைப் புலியும் ஆமோதித்தது. "எனக்கு மாடும், பசுவும் எல்லாம் ஒன்றுதான். சீக்கிரம் சென்று பசுவைக் கொண்டு வா" என்று கத்திற்று.

புலியை நிலத்திலேயே இருக்கச் சொல்லிவிட்டு, குடியானவன் வீடு போய்ச் சேர்ந்தான். தன் மனைவியிடம் நடந்த சங்கதி எல்லாம்

எம். என். மணி, சென்னை.



மூச்சு விடாமல் சொன்னான். மனைவிக்கோ சொல்லி முடியாத கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. "நமக்கு இருப்பது இந்த ஒரே ஒரு பசுதான். இதைப் புலிக்குக் கொடுத்து விட்டால் நம் பிள்ளைகளுக்குப் பால் எப்படி கிடைக்கும்? எனக்குப் பாயசம் என்றால் உயிராச்சே? பால் இல்லாமல் பாயசம் எப்படி கிடைக்கும்? வேண்டுமானால், அந்த இரண்டு மாடுகளையே புலிக்குக் கொடுத்து விடுங்கள்" என்று பதில் கூறினான்.

"நன்றாகத்தான் இருக்கிறது, உன் நியாயம்! மாடுகள் இல்லாவிட்டால் நிலத்தை உழ முடியாது. நிலத்தை உழாவிட்டால் பயிர் செய்ய இயலாது. பயிர் செய்யாவிட்டால் பட்டினி கிடந்துதான் சாகவேண்டும். போடா வைத்தியம்! பால் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. நான் பசுவைக் கொண்டுபோகிறேன்" என்று குடியானவன் பிடிவாதமாகப் பேசினான்.

அவன் மனைவிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. அந்த சமயத்தில் அவளுக்கு ஒரு யோசனை தோன்றியது. புருஷனை நோக்கி, "நீங்கள் புலியிடம் சென்று 'என் மனைவி பசுவைக் கொண்டுவருகிறாள். இன்று நீ ஏதோ கரி முகத்தில்தான் விழித்திருக்கிறாய்' என்று சொல்லுங்கள். அதன் பிறகு மற்ற விஷயங்களை நான் கவனித்துக் கொள்கி



றேன்" என்று அவனிடம் சொல்லி அனுப்பினாள்.

குடியானவன் தன் மனைவி சொன்னதை அப்படியே புலியிடம் சொன்னான். அதைக் கேட்டு புலி சந்தோஷப்பட்டது.

குடியானவனின் மனைவி ஒரு ராணிவேஷம் போட்டுக்கொண்டு குதிரையேறிப் புலி இருக்கும் இடத்திற்குச் சென்றாள். அவள் குதிரையின் கடிவாளத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு அதிகக் கோபத்துடன் புலியை நோக்கி, "ஓ போ, நீ இங்கேதானா இருக்கிறாய்? என் திட்டத்தின் படி இன்னும் ஒரு புலி மட்டுமே பாக்கியாக இருக்கிறது. நானும் உன்னைப் பிடித்துப் போகத்தான் காடெல்லாம் அலைந்து பார்த்தேன் முடிவில் இங்கே சிக்க சேர்ந்தது சரி, வா! என்னுடன் உன்னை அந்த காளிக்குப் பலியிடப் போகிறேன்" என்று உரத்த குரலில் முழக்கமாகப் பேசினாள்.

அவள் இதைச் சொல்லி முடிப்பதற்குள், புலி ஒரே ஓட்டமாகக் காடுமேடுகளைப் பார்த்து ஓடிவிட்டது. குடியானவன் தன் மனைவி செய்த சூழ்ச்சிக்கு மெச்சி மனமகிழ்ந்தான். பிறகு அவன் தன் இரண்டு மாடுகளையும் ஓட்டிக் கொண்டு வீட்டைப் பார்த்து, நடந்தான் அவன் மனைவியும் ராணி வேஷத்தை அகற்றி விட்டுப் பழைய உடைகளை அணிந்து கொண்டு அவனுடன் சந்தோஷமாக வீட்டுக்குச் சென்றாள். அன்று முதல் புலி மட்டுமே அந்தப் பக்கமே தலை காட்டவேயில்லை.

பரிக்குப் பரி

[illegible]

சாஸ்திரி ஒருநாள் சந்தோஷத்துடன்
சாலையின் ஓரம் போகையிலே
வேஷ்டிபோலவே மீசை குறுக்கிட
மந்திரி ராமா வந்தனரே!

மந்திரி ராமனைப் பார்த்ததும் சாஸ்திரி
மரியாதையுடன் வணங்கினதும்
பொலிந்த குதிரையை மந்திரி பிடித்து
மெதுவாய்ச் சிரித்து விட்டனரே!

"ராமா, சாஸ்திரி! என்ன கையிலே
கட்டைப் பெட்டிபோல் இருக்கிறதே
கொய்யாப் பழத்தைப் போட்டுக்
[கொண்டீரா!
கூறிடும் சுவாமி!" என்றனரே!

"பெட்டி அல்லவே மந்திரி ராமா!
பாரதம் கையில் இருப்பதுவே
பட்டிக்காட்டில் படித்துச் சொல்லவே
பயணம் ஆகினேன்" என்றனரே!

சாவித்ரி சொன்னதைக் கேட்டு மந்திரி
சிரிப்பாய்ச் சிரித்து விட்டாரே!
வாய்ந்தவராய்ப் பரிசுப் பரிசை
வாங்கிட சாவித்ரி எண்ணினளே!

ஒருநாள் மந்திரி வாசல் சந்நிலே
ஒய்யாரத்துடன் வருகையிலே
நிறுத்தினாளே சாவித்ரி வண்டியிடைக்
கையும் போட்டாள் மந்திரியார்!


"பக்கத்திலிருக்கும் மந்திரி! எனக்கோர்
உபகாரம் நீ செய்யணுமே.
உங்களைக்காட்டிலும் யாருக்கேயாகோ
உதவிபுரிந்திட வேண்டுகிறேன்"

என்று கேட்டதும் மந்திரி சற்று
ஏக்கத்துடனே நின்றாரே!
முன்னும் பின்னுமே யோசிப்பாலே
மோசம் போனதை நினைத்தாரே!


கேட்டுக்கொண்டார் மந்திரி அவர்
வேறு சொல்லவும் தெரியாமல்
விளையாட்டே விளையாக்க என்பதை
விளக்கிக்கேட்டுச் சாவித்ரியாள்!









1



2




3



4




5



6



7



8

[illegible] :

இதோ எட்டு [illegible] கொடிகள் இருக்கின்றனவல்லவா? அவைகளில் ஆறு கொடிகள் ஒரேமாதிரியானவை, இரண்டு கொடிகள் [illegible] மாதிரியாக இருக்கின்றன. அந்த இரண்டு கொடிகளையும் கண்டுபிடிக்க முடியுமா? முடியா விட்டால் [illegible] பக்கத்தில் பாருங்கள்

சீர்த்திருத்தம்

தர்மபுரி என்னும் கிராமத்திலே தர்ம சீலர் என்று ஒரு செல்வர் இருந்தார். அவர் பெயருக்கு ஏற்றபடி ஏழைகளுக்கு தான தருமங்களைச் செய்து வந்தார். ஊர் ஜனங்களுக்கு தர்மசீலரிடத்தில் மிகுந்த மரியாதை ஏற்பட்டது.

தர்மசீலருக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் தயாளன். தர்மசீலர் தயாளனை நல்ல பழக்க வழக்கங்களுடன் வளர்க்க வெகு ஆவல் கொண்டிருந்தார். தயாளன் பள்ளியில் கல்வி கற்கத் தொடங்கினான். ஆனால் என்ன பிரயோஜனம்! பள்ளி மாணவர்களுடன் கூடி அடிக்கடி ஊரைச் சுற்றி, கெட்ட பழக்க வழக்கங்களில் ஈடுபட்டான். தர்மசீலரோ தன் ஒரே மகனைக் கண்டித்துப் பேச முடியாமல், அவனுக்கு வேண்டிய பணத்தை எந்நேரமும் கொடுத்து வந்தார்.

தயாளனிடம் பணம் இருக்கிறது என்ற ரகசியத்தை அறிந்த நண்பர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள். தயாளன் இருக்கும் இடத்தைத் தேடித் தேடி அவர்களும் செல்லுவர். அதைப்போல் பள்ளி மாணவர்கள் தயாளனுடன் சேர்ந்து, அவனை எந்நேரமும் கிடைத்த இடங்களுக்கு எல்லாம் அழைத்துச் சென்று, கெட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி விட்டனர். தயாளனின் தேக நிலை நாளுக்கு நாள் க்ஷீணித்துப்போகத் தொடர்ந்தது. இதை அறிந்த தர்மசீலர் தயாளனுக்கு அன்று முதல் ஒரு செப்புக் காசும் கொடுக்க மறுத்து விட்டார். தயாளனிடத்தில பணம்

ஆர். எஸ். ராஜலக்ஷ்மி, மயிலாப்பூர்



இல்லை என்று எல்லோரும் அறிந்ததும் அவன் அன்பர்கள் யாரும் அவனைத் தேடி வருவதை விட்டு விட்டார்கள்


நயானன் இப்பொழுது தனித்து நின்று விட்டான். அவன் நிலை 'சீ' என்று ஆயிற்று. இந்த உலகமே அவன் கண்களுக்கு இருண்டு விட்டதுபோல் இருந்தது. நயானனுக்கு ஒரு நிமிஷமும் வீட்டில் இருக்க மனம் வரவில்லை. அன்றிரவே யாருக்கும் தெரியாமல் வீட்டை விட்டு வெளியே போய் விட்டான். அவன் எங்கே போனான் என்பது யாருக்கும் தெரியாது

மறுநாள் காலையில் தர்மசீலர் தன் மகனைத் தேடிப் பார்த்தார். அவனை எங்கேயும் காணவில்லை. தர்மசீலருக்கு ஒன்றும் விளங்கவில்லை. தன் மகனைப் பற்றி ஒரே கவலையாக இருந்தார். அவனை எப்படியாவது கண்டு பிடித்துக் கொண்டு வரவேண்டும் என்று நினைத்துத் தன் வேலையாட்களை கூப்பிட்டு, "நீங்கள் இப்போதே விரைந்து சென்று நயானனைக் கண்டு பிடியுங்கள். அவனைப் பார்த்தவுடனே அழைக்க வேண்டாம். அவனுக்குத் தெரியாமல் நீங்கள் முன்னால் சென்று, அவனுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்து உதவி செய்யுங்கள். எப்படியாவது அவன் தானாகவே வீட்டைத் தேடி வந்து விடுவான். ஆகையால் அதற்கு வேண்டிய பணத்தை எடுத்துச் செல்லுங்கள்" என்று சொன்னார். வேலையாட்களும் அதன்படியே நயானனைத் தேடிச் சென்றார்கள்

நயானன் வெகுதூரம் நடந்த பின் மேலும் நடக்க முடியாமல் சோர்வுற்று, ஓர் மரத்தடியில் உட்

காத்தான். அவனுக்கு எதிரில் ஒரு மிட்டாய்க்கடை இருந்தது. அந்தக்கடை தர்மலிங்கின் வேலையாட்களுடையது என்று தபாலனுக்கு எப்படித் தெரியும்? தபாலன் வழியில் ஒரு செப்புக் காசும் கொண்டு போகாததால் பசியோடு அக்கடைக்காரர்களிடம் சென்று, "ஐயா, எனக்குப் பசியாக இருக்கிறது. ஏதாவது இருந்தால் கொடுங்கள்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான். உடனே அவர்கள், தபாலனுக்கு வேண்டிய தின்பண்டங்களைக் கொடுத்து உதவினார்கள். பிறகு தபாலன் அன்றிரவு அங்கேயே தூங்கிவிட்டான்.

பொழுது விடிந்ததும் தபாலன் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு, தன் வழியே நடந்து சென்றான். வழியில் ஒரு ஏரி குறுக்கிட்டது. ஏரியின் ஆழம் அதிகமாக இருந்தது. அக்கரைக்குச் செல்வோர் படகில் ஏறிக்கொண்டு போனார்கள். படகு ஓட்டுபவன் அவர்களிடம் காசை வாங்கிக்கொண்டுதான் கரை சேர்ப்பித்தான். ஆனால் தபாலனிடம் காசில்லை. அவன் குதித்



துக் கொண்டிருப்பதைப் பார்த்த படகுக்காரர்கள், அவனைப் படகில் ஏற்றிக்கொண்டு கரை சேர்த்து விட்டார்கள். தபாலன் அவர்களுக்குத் தன் நன்றியைத் தெரிவித்து விட்டு, மீண்டும் நடக்கத் தொடங்கினான். படகுக்காரர்களும் தர்மலிங்கின் வேலையாட்கள்தான் என்று அவனும் புரிந்து கொள்ள முடியவில்லை.

சிறிது தூரம் சென்றதும் ஒரு பெரிய மதில் குறுக்கிட்டது. மதில் ஏற அவனும் முடியாமல் நினைத்துக் கொண்டிருந்தான்.

போது அவனுக்கு அதிக தாகம் ஏற்பட்டது. தண்ணீர் இருக்கும் இடமே அவனுக்குத் தெரியவில்லை. அந்த சமயத்தில் தர்மசீலனின் வேலையாட்கள் அவன் எதிரில் ஒரு அழகான பல்லக்குடன் தோன்றினார்கள். தயாளனை அந்தப் பல்லக்கில் ஏறி உட்காரும்படி கேட்டுக் கொண்டார்கள். தயாளனுக்கு விஷயம் ஒன்றும் விளங்கவில்லை. பேசாமல் பல்லக்கில் உட்கார்ந்தான். வேலையாட்கள் அவனைப் பல்லக்கிலே, சுமந்து கொண்டு போனார்கள். தயாளனுக்கு அவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டது. "நீங்கள் யார்? எனக்கு இவ்வளவு உதவி செய்கிறீர்களே! நான் உங்களுக்கு ஒரு உபகாரமும் செய்யவில்லையே?" என்று கேட்டான்.

வேலையாட்கள் தயாளனிடம் நடந்த சம்பவத்தைச் சொன்னார்கள். உடனே தயாளன் மனம் மாறி விட்டது. "ஆகா! என் அருமைத் தந்தை என் மீது எவ்வளவு அன்பு! நான் கொடியவன் என்று அவருக்குத் தெரிந்திருந்தும் என்னை எவ்வளவு ஜாக்கிரதையாகப் பாதுகாத்தார். என் தந்தையைப் போன்ற தர்மசீலர்கள் உலகிலும் இருப்பார்களா?" என்று அலறினான் தன் வேலையாட்களுடன் தயாளன் வீட்டுக்குச் சென்று தந்தையின் காலடியில் விழுந்து, "தந்தையே! என்னை மன்னியுங்கள், மன்னியுங்கள்!" என்று கதறி அழுதான்.

தர்மசீலனின் முகம் மலர்ந்தது. தயாளனை அன்புடன் கட்டித் தழுவிக்கொண்டார். "இப்போ தானப்பா நல்ல மகன் ஆகியிருக்கிறாய்; அதுவே போதும்" என்று கூறினார் தான் செய்த சிகிச்சை வெற்றி பெற்றதற்கும் சந்தோஷமடைந்தார்.





முன்னொரு காலத்திலே ஒரு அரசன் இருந்தான். அனேக வருடங்களாகியும் அவனுக்கு ஒரு குழந்தை கூட பிறக்கவில்லை. அனேக விரதங்களும், பூஜைகளும் செய்து பார்த்தான். ஒன்றும் பலிக்கவில்லை.

ஒரு நாள் ராணி தன் அரண்மனை அந்தப்புரத்திலிருக்கும் குளத்தில் நீராடிக்கொண்டிருந்தாள். அந்த சமயத்தில் குளத்திலிருந்து ஒரு அழகான தவளை பொன் மேனியுடன் 'கிரூக், கிரூக்' என்று ஜொலித்தவாறு ராணியின் எதிரில் தோன்றியது. ராணி அதைப் பார்த்து மிகுந்த மகிழ்ச்சியுடன் "ஆகா! எவ்வளவு அழகான தவளை, எனக்கோ ஒரு பெண் குழந்தை பிறந்தால் இந்தத் தவளைக்குக் கொடுத்து விவாகம் செய்துவைக்கமாட்டேனா" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

"அப்படியே நடக்கும்" என்ற பாவனையில் தவளையும் தன் தலையை அசைத்து 'வொடக்' என்று தண்ணீரில் மூழ்கிச் சென்றது

இந்த சம்பவம் நடந்த ஒரு மாதத்திற்குப் பிறகு ராணி கர்ப்பவதியானாள். இந்தச் சங்கதியை கேட்ட அரசன் அளவுகடந்த சந்தோஷமடைந்தான். பத்து மாதங்கள் முடிந்ததும் ராணிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. குழந்தையோ செக்கச் செவேர் என்று அழகாக இருந்தது. குழந்தை பிறந்த பத்தாம் நாளன்று அரசன் புரோகிதர்களை வரவழைத்து குழந்தைக்கு நாமகரணம் செய்வித்தான். புரோகிதர்கள் குழந்தைக்கு 'ரோகிணி' என்று பெயரிட்டார்கள்.

ரோகிணி நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக

பி. எஸ். பழனிவேலு, பொள்ளாச்சி



வார்த்தை பதிலுரை பேசாது புறப்பட்டாள். இந்த சமாசாரத்தின் அழுத்த ரகசியத்தை அவள் குளத்தில் ஸ்நானஞ்செய்துகொண்டிருந்தபோது நடந்த சங்கதி ஞாபகத்திற்கு வரவில்லை. ரோஹிணிக்கு விவாகம் செய்யத் தீர்மானித்தார்கள்.

இந்த சங்கதியைக் கேட்டபோன தவளை கோபத்துடன் குளத்தை ஏகமாய் கோலாகலம் செய்யத்தொடங்கிற்று. ஒருநாள் ரோஹிணி குளத்தில் ஸ்நானம் செய்துகொண்டிருக்கும்போது திடீரென்று தவளை அவள் தோளின் மீது குதித்துவிட்டது. ரோஹிணி பயத்துடன் குளத்தைவிட்டு வெளியே வந்து ஓட முயன்றாள். ஆனால் தவளை மீண்டும் அவள் தோளின் மீது குதித்தது. எத்தனை தடவைகள் இப்படி தள்ளிவிட்டாலும் தவளை ரோஹிணியை விடவில்லை. ரோஹிணி வேறுவழியின்றி தவளையைத் தன் மடியில் போட்டுக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பினாள்.

தோழிகள் ரோஹிணியைப் பார்த்து "அது என்னம்மா! மடியிலே ஏதோ ஒளித்துக் கொண்டு போகிறாயே?" என்று கேட்டார்கள்.

ரோஹிணி முகத்தைக்கோணிக்கொண்டே "ஒன்றுமில்லை, வெற்றிலை கொண்டு போகிறேன்" என்று சொன்னாள்.

இதைக் கேட்ட மடியிலிருந்த தவளை கோபத்துடன் 'தொப்' என்று வெளியே குதித்து ரோஹிணியை நோக்கி—

தவளை ஏமாறுமா? சொல்லேலம்மா!
தனி வட்டமான கண்ணாடியே
வெற்றிலைக் கட்டோடா என்ன சொல்லே
கொடு மிஞ்சியதோ சொல்லேன்
காண் ஏன் என்றாய் நீ என்னை
ஏனோ விட்டுப்போ அன்னமே! என்று

பாடிற்று.

இந்தப் பாட்டைப் பாடிக் கொண்டே தவளை ரோஹிணியின் மடிக்குள் தாவிச் சென்றது. அங்கே கூடி இருந்த பெண்களெல்லாம் அதிசயத்துடன் அப்படியே பிரமித்து விட்டார்கள். ரோஹிணி இந்த சங்கதியைத் தன் தாயாரிடம் சொன்னாள். அப்போதுதான் ராணிக்குத் தவளையின் ஞாபகம் வந்தது. நடந்ததெல்லாம் ரோஹிணிக்குச் சொன்னாள். ரோஹிணி தாயார் சொற்படி நடக்கத் தீர்மானித்தாள்.

அரசனும், அரசியும் ரோஹிணியின் சம்மதப்படி அவளைத் தவளைக்குக் கொடுத்து விவாகம் செய்து வைத்தார்கள். கலியாணம் முடிந்ததும் ரோஹிணி தன் பெற்றோர்களிடம் விடை பெற்றுக்கொண்டு தவளைப் புருஷனைத் தேரின் மேல் ஏற்றிக்கொண்டு தவம் செய்யக் காட்டுக்குச் சென்றாள். ரோஹிணியின் தவத்திற்கு மெச்சி பரமசிவன் பார்வதியுடன் தோன்றி "உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கேட்டார்.

"என் புருஷனுக்கு மனித உருவம் அளிக்கவேண்டும்" என்று சொன்னாள்.

"அப்படியே ஆகட்டும்!" என்று சொல்லி அவர்கள் மறைந்து விட்டனர். உடனே தவளை ஒரு அழகான ராஜகுமாரனைப் போல உருவம் பெற்று ரோஹிணிமுன் நின்றான். ரோஹிணி சந்தோஷத்துடன் தன் புருஷனோடு அரண்மனைக்குத் திரும்பினாள். பெற்றோர்கள் மகிழ்ச்சியுடன் ரோஹிணிக்கும் தவளை அரசகுமாரனுக்கும் வெகு விமரிசையாக மறுமணம் செய்தார்கள். அன்று முதல் இன்பமாய் ரோஹிணி தன் புருஷனுடன் சுகமாக வாழ்ந்து வந்தாள்




([illegible])

மாநகரர்கள் வர்த்தமானனுக்கு மரியாதையாக வரவு பெயரிட்டார்கள் அவனைப் பார்க்கவேணுமென்று ஆவலுடன் அந்நகர் ஜனங்கள் வீதிக்கு வெளியே குமாரர்களுடன் கூடியிருந்தார்கள். அரசனும், ராணியும், மந்திரிமார்களும் வர்த்தமானனைப் பார்க்க விரும்பி, கோவிலுக்கு எதிரில் கட்டப்பட்டிருந்த ஒரு வட்ட மேடையின் மீது நின்றார்கள். கோவில் வாசற்படியில் படுத்திருந்த வர்த்தமானன் தன் உருவத்தை ஜனங்களுக்குக் காட்ட எண்ணி மேலே எழுந்து நின்றான். சுற்று முற்றும் பார்த்தான. அவனைக் கண்டவுடன் அங்கே கூடியிருந்த மக்கள் ஜப்பான் பொம்மைகளைப் போலக் காட்சி அளித்தனர். ஜனங்கள் உள்ள பெரிய பெரிய வீதிகளும் அவனைக் கண்டவுடன் குச் சென்னர் சின்ன பொம்மை விதேசிப் போல் தெரிய வந்தன.

அரசன் வர்த்தமானனுடன் பேச ஆசை கொண்டு ஒரு குதிரை மீது ஏறி அவனிருக்கும் இடத்தை அணுகினான். ஆனாலும் மலை போன்ற மனிதனைக் கண்டதும் குதிரை வர்த்தமானனைப் பார்த்ததும், முன்னும் பின்னும் ஓட ஆரம்பித்தது. கவலையாக அரசன் கீழே விழாமல் தப்பித்துக் கொண்டான். அரசன் தன் குதிரையை விட்டுக் கீழே இறங்கி, வர்த்தமானனுக்குச் சமீபத்தில் வந்து நின்றான். அரசனின் சௌகரியத்தை முன்னிட்டு வர்த்தமானன் கீழே சாய்ந்து படுத்துக் கொண்டான்.

[ஜோனதன் ஸ்விஃப்ட் எழுதிய 'கல்லிவர் ட்ராவல்ஸ்'ஸைத் தழுவியது]





அரசன் வர்தமானனின் காதில் விழும்படியாக உரத்த குரலில் எதேதோ பேசினான். வர்தமான னுக்கு அது ஒன்றும் புரியவில்லை.

அரசன் சிறிது நேரம் யோசித் தான். "இவனுக்கு நம் பாஷை தெரியாவிட்டாலும் பரவாயில்லை. ஆளைப் பார்த்தால் மிகவும் சாது வாக இருக்கிறான். இவனால் நமக்கு ஏதாவது உதவி தேவையாக இருக்கக் கூடும். இவனுக்கு இஷ்டமான பழங்களைக் கொடுத்து உதவலாம்" என்று தீர் மானித்துக் கொண்டு தன் சேவ கர்களிடம் வர்தமானனுக்கு வேண்டிய உதவிகளை செய்து கொடுக்கும்படி உத்திரவிட்டான். அன்று முதல் வர்தமானனுக்கு ஊமைவேட்டை நான் சேவகர்கள் காலநேரம் தவறாமல் அவனுக் குத் தினுசு தினுசான உணவு வகைகளை கொடுத்து வந்தார்கள்.


வர்தமானனின் யோகநிலையைப் பார்க்க வந்த மக்கள் அந்த இடத்தை விட்டுப்போக மனம் வராமல் அவனை அப்படியே ஒரே பார்வையாக பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு சிலர் வர்தமானன் மீது கற்களை வீசி எறிந்தனர். அம்புகளையும் எய் தனர். வர்தமானன் அவைகளைப் பிடித்துத் தன் சட்டைப்பைகளுள் போட்டுக்கொண்டான். பாவம், சட்டைப் பைகளுள் இருந்த வாம னர்கள் "குய்யோ, முறையோ" என்று கூக்குரலிட்டுக் கதறி னார்கள். வர்தமானன் சிறிது நேரம் அவர்களை அழவைத்துப் பிறகு வெளியே எடுத்துப் போட் டான். பூனைக் குட்டிகளைப்போல் வாமனர்கள் கூக்குரலிட்டுக் கொண்டே ஓடினார்கள். இந் தச் செய்தியைக் கேட்ட அர சன் மட்டில்லா மகிழ்ச்சியுடன்

வர்த்தமானனைப் புகழ்ந்து பாராட்டினான்.

வர்த்தமானன்மீது அரசனுக்கு அன்பு பெருகியது. அவனுக்கு ஒரு அழகான படுக்கையை தயார் செய்து கொடுக்கும்படி தன் அரண்மனைத் தையல்காரர் களுக்கு உத்திரவிட்டான். அறு தையல் காரர்கள் ஒன்று சேர்ந்து அவனுக்கு வேண்டிய அளவில் ஒரு படுக்கையைத் தயார் செய்து கொடுத்தார்கள். அதை செய்துமுடிப்பதற்குள் அவர்கள் பட்ட பாடு சொல்லும் தரமல்ல! சோள உணவுக்குக் கேற்ற ஒரு போர்வையையும் அநேக விப் பந்திகளை கொண்டு அவனுக்குத் தயார் செய்து கொடுத்தார்கள்.

அந்த தேசங்களிலிருந்து அநேகர் வந்து வர்த்தமானனைப் பார்க்க விரும்பினார்கள். ஆனால் பகை அரசர்கள் தம் வர்த்தமானனை ஏதாவது செய்துவிடப் போகிறார்களோ என்ற பயமோ என்று நினைத்த அரசன் அன்றுமுதல் வர்த்தமானனைப் பார்க்க வரும் வெளிநாட்டினரைத் தன் உத்திரவு இல்லாமல் அனுமதிக்கக்





கூடாது என்னும் ஒரு சட்டத்தை ஏற்படுத்தினான். இதனால் அநேக கூட்டத்தைத் தடுக்க முடிந்தது.

நாளடைவில் வானரக்கூட்டத்திற்கு மனிதன் என்ற பயம் நீங்கி விட்டது. எல்லோரும் பயமின்றி அவனிடம் சென்று விளையாடத் தொடங்கினார்கள். வெகு சீக்கிரம் அவன் உள்ளங்கையில் நின்று சாப்பிடப் பழகினார்கள். இப்படி ராகவர்மன் அவர்களுடன் காலத்தைக் கழித்து வந்தான்.

வர்தமானன் மாமன் பட்டணத்தை யை ஒவ்வொரு கற்றுத் தேர்ந்தும், அரசன் அடிக்கடி அவனிடம் வந்து ஏதாவது பேசி விட்டுப் போவான். ஒரு நாள் வர்தமானன் தன்னைக் கட்டிப் போட்டிருக்கக் காரண் சக்தியை அறியத் தனிமேப்படி அரசனைக் கேட்டுக்கொண்டான். ஆனால் அரசன் அவனிடம் ஒன்றும் பேசாமல் போய்விட்டான்.

மறுநாள் அரசன் வர்தமானனிடம் ஏதோ பேசிவிட்டுப் போக

வந்தான். அப்போதும் வர்தமானன் அரசனை நோக்கி "நீங்கள் என்னை விடுதலை செய்யவே மாட்டீர்களா?" என்று கேட்டான்.


"நான் செய்வது ஒன்றும் இல்லை. என் மந்திரிகளும், உறவினர்களும் என்னைத் தடுக்கிறார்கள். நீ மட்டும் உனது சோதனை செய்வதற்கு அனுமதித்தால், நான் அவர்களைக் கேட்டுக் கொண்டு உன்னை விடுவிக்கும்படி ஏற்பாடு செய்கிறேன்" என்று அரசன் கூறினான்.

"அதற்கென்ன! அப்படியே செய்யுங்கள்!" என்று வர்தமானன் பதில் கூறினான்.

அரசனின் உத்திரவின்படி சேவகர்கள் வர்தமானனை சோதனையிடத் தொடங்கினார்கள். வர்தமானன் சில சேவகர்களைத் தன் சட்டைப் பைக்குள் விட்டுச் சோதனை செய்யச் சொன்னான். சோதனை முடிந்தபிறகு சேவகர்கள் அரசனிடம் விரைந்து சென்று "அரசே! நாங்கள் அவன் சட்டைப் பைக்குள்



நுழைந்துப் பார்த்தோம்; அங்கே பெரிய பெரிய பொன் தட்டுகள் இருந்தன. அவற்றின் மேல் பொன் எழுத்துக்களும் காணப்பட்டன. (அது வர்தமானனின் பொன் நாணயங்கள்) அதன் பிறகு அடுத்த பைக்குள் நுழைந்து பார்த்தோம். அதில் ஒரு பெரிய பெட்டி ஒன்று இருந்தது. அதைத் திறந்து உள்ளே சென்றோம் அவ்வளவுதான். எங்களால் அந்தப் பெட்டியின் கரையைக் காண முடியவில்லை. அங்கே ஏதோ சிகப்பு மண் இருந்தது. அதன




கொடு நாங்களும் "அசை, அசை" என்று தம்பிடும் அதை அடக்க முடியாமல் வெளியே வந்து விட்டோம் (இது வர்த்தமானனின் [illegible]) அவன் இப்போது ஒரு அரண்மனை இருக்கை அலங்காரத்திலும் செய்யப்பட்டதுதான் அவன் அதை புதிய இப்போது கட்டிக் கொண்டிருக்கிறான்" (இது வர்த்தமானனின் [illegible] உரை) என்று மூத்தவரிடம் சொன்னார்கள்

அரசன் அவர்கள் சொன்னதை எல்லாம் ஒரு புத்தகத்தில் குறித்துக் கொண்டு நேராக வர்த்தமானனிடம் சென்று அந்த சாமான்களைத் தன்னிடம் கொடுத்து விடும்படி கேட்டான். வர்த்தமானன் பதில் பேசாமல் எல்லாவற்றையும் அரசனிடம் ஒப்புவித்தான்

மறுநாள் வர்த்தமானனை தண்டனை விதிக்க செய்யும்படி அரசனை கேட்டுக் கொண்டான். அரசன் சில நிபந்தனைகளை பேசி வர்த்தமானனை விடுவித்தான். அந்த நிபந்தனைகள் என்ன தெரியுமா? "வர்த்தமானன் அரசன் உத்திரவில்லாமல் வெளியே போகக்கூடாது. ஊரைச் சுற்றி வரவேண்டுமானால் இரண்டு மணிக்கு முன்னதாகவே தெரிவிக்கவேண்டும். பகலிலும் இரவிலும், புல் வெளிகளிலும் அவன் படுக்கக் கூடாது. யார் தரையிலும், வீட்டின் மீதும் காலை வைக்கக் கூடாது. யுத்தம் நடக்கும் சமயத்திலே வர்த்தமானன் யாவருக்கு உதவியாக இருந்து போர் செய்யவேண்டும்" இந்த மாதிரி நிபந்தனைகளுக்கு உடன்பட்டப் பிறகுதான் வர்த்தமானனை அரசன் விடுதலை செய்தான்.

(தொடரும்)





நல்ல தீர்ப்பு

[illegible]

[illegible]

கோர்ட்டில் தாவா செய்தார். மறு நாள் காலை 10 மணிக்கு நீதிபதி வந்து தன் ஆசனத்தில் அமர்ந்தார். முதலில் நீலிதரின் மனுவை எடுத்து அதைநன்றாகப் பார்வையிட்டார். பிறகு அவர் கருப்பனைப் பார்த்து, "அடே கருப்பா! நீ நீலிதருக்கு உன் னிழலை விற்று எத்தனை மாதங் களாகிறது?" என்று கேட்டார்.

கருப்பன் 'சட்' என்று, "ஆறு மாதங்கள் ஆகின" என்று பதில் கூறினான்.

"நீ, நீலிதருக்கு விற்றது நிழல் மட்டும்தானே, தண்ணீர் அல்லவே?" என்று இன்னொரு கேள்வியைக் கேட்டார்.

"இல்லை, என் நிழலை மட்டும்தான் விற்றேன்" என்றான் கருப்பன்.


நீதிபதி சிறிதுநேரம் யோசித்து, "அடே, அசட்டுக் கருப்பா! நீ ஆறுமாதங்கள் வரையில் அவர் நிழலில் தண்ணீரை இருக்க விட்டதற்கு நீலிதருக்கு மாதம் பத்துரூபாய் வீதம் ஆறு மாதங்களுக்கு அறுபது ரூபாய் வாடகை யாக கொடுத்துத் தீரவேண்டும். இல்லாவிடில் மூன்று மாதம் சிறை காவல் தண்டனை!" என்று தீர்ப்பைக் கூறினார்.


கருப்பன் முகத்தில் அசடு வழிந்தது. அவன் தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டு, நீலிதருக்கு அறுபது ரூபாயையும் கொடுத்து விட்டுத் தன்னை மன்னிக்கும்படிக் கேட்டுக்கொண்டான். நீலிதர் புன்சிரிப்புடன் "கருப்பா, நான் அண்டை வீட்டுக்காரனென்கிற நன்றிகூட வைக்காமல் என்னையே ஏமாற்றப் பார்த்தாயே! உனக்கு [illegible] வைத்தான் நீதிபதி கூறினார்!" என்று சொல்லி அவனை மன்னித்து விட்டார். கருப்பன் [illegible] போல தலைகுனிந்தவாறு வீட்டுக்குச் சென்றான்.

மேலே உள்ள படத்தில் [illegible] மறைந்திருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடிக்க முடியுமா?

கோலங்கள்










மூன்று படங்கள்

ஒரு இளவரசன் வாலிபப் பருவத்தை அடைந்ததும், அயல் நாடுகளின் அதிசயங்களைப் பார்த்து வரவேண்டுமென்று விரும்பித் தன் தந்தையிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டான். அவன் அநேக காடுகள், மலைகள் இவைகளைக் கடந்து சென்று, முடிவில் ஓர் நகரை அடைந்தான். அந்த நகரின் பல இடங்களிலும் ஒரு அதிசயமான விளம்பரம் ஒட்டப்பட்டிருந்தது. இளவரசன் அதைப் பார்த்து ஆச்சரியப் பட்டான். அவன் அப்படி ஆச்சரியப் படுவதற்கு காரணம் என்ன தெரியுமா? அந்த விளம்பரத்தில் மூன்று படங்கள் இருந்தன. ஒரு படம் அழகான ஒரு ராஜகுமாரியினுடையது. இரண்டாம் படத்தில் அந்த ராஜகுமாரி ஒரு வாலிபனுடன் ஓடுகிறாள். மூன்றாம் படத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, அதில் ஒன்றில் ஒரு வாலிபனைத் தூக்கிலிட்டனர்; மற்றொன்றில் இளவரசி அந்த வாலிபனுக்குப் பூமாலை சூட்டுகிறாள். அந்தப் படங்களைப் பார்த்த ராஜகுமாரனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

அன்றிரவு தங்குவதற்கு அந்த நகரில் இருந்த சொக்கிப் பாட்டியின் வீட்டுக்குச் சென்றான். பாட்டி இளவரசனிடம் "நீ யார்? எந்த ஊர்?" முதலிய கேள்விகளை முறையே கேட்டாள். இளவரசன் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லிவிட்டு "அது சரிதான் பாட்டி! இந்த நகரில் என்ன விசேஷம்" என்று கேட்டான்.

பி. சுந்தரம், வண்ணாரப்பேட்டை, சென்னை



"அழகான கண்ணே, சொல்லுகிறேன் கேள். இந்த நாட்டின அரசனுக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவள் அழகில ரம்பையைப் போல இருப்பாள் எல்லாக் கல்வி கேள்விகளிலும் நன்றாய்த் தேர்ந்தவள். அவளுக்குக் கல்யாணம் என்றாலே பிடிக்காது! ஆனால் தன் தகப்பனின் வேண்டுகோளுக்கிணங்கி, அவள் சில நிபந்தனைகளைப் பிறப்பித்திருக்கிறாள். அதாவது இளவரசியை விவாகம் செய்துகொள்ள விரும்பும் வாலிபன் அவளுடன் ஓட்டப் பந்தயத்தில் ஜெயிக்கவேண்டுமாம். அப்படி ஜெயித்தவனைத்தான் இளவரசி மணம் செய்து கொள்வாளாம். தோற்றுவிட்டால் அவனை உடனே தூக்கிலிடுவார்களாம். இதுதான் அவளின் நிபந்தனைகள்" என்று பாட்டி விபரமாகச் சொன்னாள்.

இளவரசனுக்கு, விளம்பரத்தில் கண்ட மூன்று படங்களின் அர்த்தம் இப்போதுதான் விளங்கிற்று. அவன் மனம் படபடவென்று அடித்தது. "எப்படியானாலும் சரி! அந்த இளவரசியை அடைந்தே தீருவேன்" என்று கங்கணம் கட்டிக்கொண்டு பாட்டியிடம் விடை பெற்றுக் கொண்டு அரண்மனையை நோக்கி நடந்தான். அவன் ஒரு அடர்ந்த தோட்டத்தின் வழியாகப் போகும்போது ஒரு பறவை வலையில் சிக்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தான். அவன் அதை விடுவித்துத் தன் வழியே நடந்து செல்லும் போது, அந்தப் பறவை இளவரசனை நோக்கி, "ராஜகுமாரனே! நீ எனக்குச் செய்த உபகாரத்தை என்றும் மறவேன் என்னுடன் வா. எங்கள் பக்ஷிராஜர் உனக்கு ஏதேனும் வெகுமானம் கொடுப்பார்" என்று சொல்லி அழைத்தது.




அரசகுமாரன் பறவையைப் பின்பற்றி நடந்தான். பக்ஷிராஜா தன் மந்திரிகளுடன் சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தது. வழியி லிருந்து உதவி பெற்ற பறவை இளவரசனின் நற்குணங்களைப் பற்றித் தன் ராஜாவிடம் புகழ்ந்து பேசியது. பக்ஷிராஜா இளவரச னைப் பார்த்து, "உனக்கு என்ன வேண்டுமோ தயங்காமல் கேள்" என்றது.

இளவரசனுக்கு உடனே ஒரு யோசனை தோன்றியது. "பக்ஷி ராஜாவே! எனக்கு ஒரே ஒரு உதவியை மட்டும் நீங்கள் செய்து கொடுத்தால் போதும். அந்த நாட்டு இளவரசியை மணக்க நான் ஆசைகொண்டிருக் கிறேன். ஆனால் அவளை ஓட்டப் பந்தயத்தில் ஜெயித்தவர்தான் மணந்துகொள்ள முடியும். இதற் குத் தாங்கள் தான் ஒரு வழி யைச் சொல்லித் தரவேண்டும்" என்று கேட்டான்.

"ராஜகுமாரா! இளவரசியை மணந்து கொள்ள ஆசைப்படு கிறாயா? அது மிகவும் சுலபம் அல்லவே. வேண்டுமானால் அந்த வழியைச் சொல்லுகிறேன் கேள்: அவள் பந்தயத்தில் ஒரு ரகசியம் இருக்கிறது. அதாவது ஏழு கடல்களைத் தாண்டினால் ஒரு தீவு தென்படும். அத் தீவின் நடுவில் ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளத்தில் ஒரு சுரங்கம் பாதா ளத்தைநோக்கிச் செல்லும். அதன் வழியாகப் போனால் ஒரு பயங்கரமான இடத்தில் இரண்டு செருப்புகள் இருக்கும். அவை களை நீ போட்டுக்கொண்டு இள வரசியுடன் ஓடினால் நீதான் ஜெயிப்பாய்!" என்று சொல்லிற்று.

இளவரசன் இதைக் கேட்டுப் பெருமூச்சு விட்டு "இவ்வளவு கஷ் டப்பட்டு நான் எப்படி அந்தக்



செருப்புகளை கொண்டுபோய் விடவும்! அந்த காரியத்திற்கும் தாங்களேதான் உதவி செய்ய வேண்டும்" என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டான்.

பக்ஷிராஜா இளவரசனின் வேண்டுகோளுக்கு இணங்கி, "அப்படியே ஆகட்டும். நான் என் சேனாதிபதியை அனுப்புகிறேன். அதன் மேல் நீ ஏறிக்கொண்டால் அது உன்னை ஏழுகடலையும் கடந்து அந்தத் தீவில் இறக்கிவிடும். பிறகு உன் சாமர்த்தியம்போல் நடந்து கொள்!" என்று சொன்னது.

"எனக்கு இவ்வுதவி போதும்!" என்று இளவரசன் வணங்கினான்.


சேனாதிபதிப்பறவை இளவரசனைக் குறிப்பிட்ட தீவில் இறக்கிவிட்டுச் சென்றது. இளவரசன் எழுந்து கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தான். திடீரென்று அவன் எதிரில் ஒரு ராக்ஷஸி தோன்றி "டேய், யாரடா நீ? இங்கே, மனிதன் காலு? என்னைக் கலியாணம் செய்து கொண்டால் உன்னை விட்டுவிடு வேன் இல்லையேல் உன் தேகம் உதிர்த்து எரித்துவிடுவேன்!" என்று சொல்லிப் பல்லை நறநற வென்று கடித்தது.

இளவரசனுக்கு அப்போது பாதி உயிர் போனதுபோல் ஆகி விட்டது. ராக்ஷஸியை நோக்கி, "நான் வந்த வேலை முடிந்தால் உன்னை விவாகம் செய்து கொள் கிறேன்" என்று சொன்னான்.

ராக்ஷஸியும் அதன்படியே ஒப்புக்கொண்டு அவனிடம் ஒரே ஒருவகை திராவகத்தைக் கொடுத்து, "நீ இதை உடம்பில் தேய்த்துக்கொண்டால் தண்ணீரில் ஆழமாக எது வேண்டுமானாலும் போகலாம். மேலும் தண்ணீருக்குள் இருக்கும் எல்லாப் பொருள்களும் நன்றாகத் தெரிய வரும்" என்று சொல்லிற்று.

இளவரசன் ராக்ஷஸி கொடுத்த திராவகத்தை உடம்பில் பூசி

கொண்டு குளத்தில் குதித்தான். உடனே ஒரு சுரங்கம் தென்பட்டது. அதன் வழியாகச் சென்றும் போது திடீரென்று ஒரு வெளிச்சம் தென்பட்டது. அந்த வெளிச்சத்தில் ஒரு இரட்டைப் பூதம் மெய் மறந்து தூங்கிக் கொண்டிருந்தது. இளவரசன் பூனைபோல அடிமேல் அடிவைத்து மெதுவாக உள்ளே சென்றான். அங்கே ஒரு குகை தென்பட்டது. அதன் மத்தியில் அழகான இரண்டு செருப்புகள் தொங்கிக் கொண்டு இருந்தன. குகைக்குள் பெரிய பெரிய தேள்களும், பாம்புகளும் ஊர்ந்து கொண்டிருந்தன. அரசகுமாரனுக்குச் செருப்புகளை எப்படி எடுப்பது என்று தெரியவில்லை. அங்கே ஒரு வேதாளம் தூங்கி வழிந்து கொண்டே காவல் காத்தவாறு நடமாடிக் கொண்டிருந்தது. இளவரசன் ஒரு கன்றுமேல் ஏறி நின்றான். திடீரென வேதாளம் அவன் பக்கமாக வருவதைப் பார்த்து, இளவரசன், 'தொபுக்' என்று அதன் தோளின் மீது குதித்தான். அந்த மூட வேதாளமோ அதைக் கவனிக்கவே இல்லை. அது குகைக்குள் செல்லும் சமயத்தைப் பார்த்து, இளவரசன் மேலே மாட்டியிருந்த



செருப்புகளைத் தடியால் தட்டி எடுத்துக் கொண்டான். வேதாளம் கன்றுப் பக்கமாக வந்த போது, உடனே கன்றைக் கட்டிப் பிடித்துக் கொண்டு மெதுவாக வெளியே வந்தான்.

சுரங்க வாசலில் ஒரு ராக்ஷசன் கள்ளுச் சாராயத்தைக் குடித்துக் கொண்டிருந்தான். அவன் இளவரசனைப் பார்த்து விட்டான் "டேய், திருட்டுப் பயலே! யாரடா நீ?" என்று கூச்சலிட்டான்

இளவரசன் பயந்துபோய் அடுக்குமேல் இருந்த ...

யத்தைக் கொண்டுவந்து ராக்ஷசன் வாயில் ஊற்றினான். ராக்ஷசனுக்குக் கோபம் தணிந்தது. “டேய், நீ எவ்வளவு கெட்டிக்காரனாய் இருக்கிறாய் பார்ப்போம்?” என்று சாந்தமாகக் கேட்டான்.

“என்ன மாமா! என்னைத் தெரியவில்லையா? என் மணியே, சாராய வீட்டில் இருக்கிறேன். உனக்கு வேண்டிய சாராயத்தை வேண்டிய மட்டும் நான் தருகிறேன். என்னுடன் வருகிறாயா மாமா?” என்று இளவரசன் தந்திரமாகக் கேட்டான்.

“ஆகா! என் உயிரே சாராயம் தான் வாடா கண்ணே! உன்னை என் தோளின் மேல் ஏற்றிக் கொள்கிறேன். உன் வீட்டை எனக்கும் காட்டேன்” என்று ராக்ஷசன் கேட்டுக் கொண்டான்.

அதன்படியே இளவரசனும் ஒப்புக்கொண்டு ராக்ஷசன் தோளின் மீது உட்கார்ந்தான். பாவம்! ராக்ஷசன் இளவரசனை சுலபமாக ஏழு கடலையும் தாண்ட வைத்து, கோசல அரண்மனை வாசலில் கொண்டுவந்து இறக்கினான். இளவரசன் ராக்ஷசனைப் பார்த்து, “நீ இங்கேயே தனித்திரு! உனக்கு வேண்டிய சாராயத்தைக் கொண்டு வருகிறேன்” என்று சொல்லி, அவனை ஒரு சிறிய அறையில் பூட்டிவிட்டு வாசலில் செருப்புகளை மாட்டிக் கொண்டுபோய் இளவரசியை ஓட்டப் பந்தயத்தில் தோற்கடித்தான்! அரசகுமாரி என்றுமில்லாத மகிழ்ச்சியுடன் இளவரசனை மாலையிட்டு மணந்தாள்.

அறையில் பூட்டப்பட்டிருந்த அரக்கன் “ஹா-ஹா” என்று கதறி முடிவில் இறந்துவிட்டான். அவனை உடனே நெருப்பிலே போட்டுக் கொளுத்தி விட்டார்கள்.

மறுநாள் இளவரசனின் இஷ்டப்படி ஒவ்வொரு தெருவிலும் அரசகுமாரி இளவரசனை மணந்த படங்களை ஒட்டி, அந்தத் திருவிழாவை ஊர் ஜனங்கள் எல்லாரும் சந்தோஷத்துடன் கொண்டாடினார்கள்.



பெரிய துணை


ஒரு ஊரில் ஒரு பிராமணன் இருந்தான். அவனுக்கு ஒரு அசட்டு மனைவி இருந்தாள். அவள் எந்த காரியத்தைச் செய்தாலும், அதில் ஏதாவது ஒரு பிசகு இருந்தே தீரும். பிராமணனுக்கு அவளைப் பற்றித்தான் எப்போதும் கவலை. தன் வீட்டுக்கு வேண்டிய சாமான்களைப் பிராமணனே சென்று வாங்கி வருவான். அவன் மனைவி வீட்டிலேயே இருந்து சமையல் காரியத்தைக் கவனிப்பாள்.

சித்திரை, வைகாசி மாதங்களில் சொல்லிமுடியாத வெயில். அவஸ்! பிராமணனுக்கு வெயிலில் நடந்து சென்று பண்டங்களை வாங்கி வருவதென்றால், மிகவும் சிரமமாகப் போய்விட்டது. அதனால் அவன் முன்னதாகவே சித்திரை, வைகாசி மாதங்களுக்குப் போதுமான சாமான்களை வாங்கி வைக்கத் தீர்மானித்தான். அதன்படி பிராமணன் கடைத்தெருவுக்குச் சென்று, இரண்டு மாதங்களுக்குப் போதுமான உப்பு, மிளகாய், புளி, தனியா, பெருங்காயம் முதலியவற்றை வாங்கி வந்து மனைவியிடம் கொடுத்தான். "அடியே! [illegible] செலவு [illegible] ஒருமாதத்திற்குமேல் ஆகும் இதனுடன் சித்திரை, வைகாசிகள் வரப்போகின்றன. அவைகளுக்கு வேண்டிய பண்டங்களை நான் சேர்த்து வாங்கிக்கொண்டு வந்து உன்னிடம் கொடுத்து விட்டேன். வீடு ஜாக்கிரதை!" என்று சொல்லிவிட்டுப் போனான்.

பிராமணன் மனைவியோ, அந்த அசடு. 'சித்திரை, வைகாசிகள் வரப்போவதாகச் சொல்லிச் சென்றாரே அவர்கள் வந்தால் நான் இந்த பண்டங்களை அவர்களுக்குத்தான் கொடுக்கவேண்டும் போல் இருக்கிறது" என்று நினைத்துக் கொண்டாள் பாவம்! அவள் 'சித்திரை - வைகாசிகள்' என்பதை யாரோ இரண்டு மனிதர்களின் பெயர்களாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள்.

அவள் காலைதோறும் தன் வீட்டு வாசலில் நின்று கொண்டு, "இன்னும் சித்திரை வைகாசிகள் வரவில்லையே, எப்போது

ச. என். லோகநாதன், திருவல்லிக்கேணி



நான் வரப்போகிறேன் என்று
தெரிய வைத்தேன்!" என்று
சொல்லிக் கொண்டே இருந்தான்.


இவன் சொல்லிக் கொண்டதை
கேட்டு வீட்டிலிருந்த இரண்டு
திருடர்கள் கேட்டார்கள் அவர்
கள் மூட்டைகள் கட்டிய பெரிய
ட்டங்களை எடுத்துக் கொண்டு
தாக பிராமணன் வீட்டுக்குள்
நுழைந்தார்கள். பிராமணன்
அவர்களைப் பார்த்து, "நீங்
கள் யார்? எங்கே வந்தீர்கள்?"
என்று கேட்டான்.

திருடர்கள் சமயமென்று
நினைத்து அவர்கள், "எங்களைத்
தம்பியாக உங்களுக்கு!
சொல்லி ... -வைக்கவில்
லை" என்று சொன்னார்கள்.

அந்த அரசபைப் பெண் நகை
நகைப் பெட்டியைத் தேடாமல்,
பிராமணனை அன்று கொண்டு
வந்து கொடுத்த திருடர்களைத்
தா சமயங்களில் அவர்களிடம்
கொடுத்த ஒரு முடிச்சுப் பொட்டு
அப்படியே அவர்கள் அவை
களைப் பெற்றுக் கொண்டு
மறைத்துக் கொண்டார்கள்!

அதைக் கேட்டுப் பொறுத்த பிரா
மணனை மறுத்துத் திரும்பியதும், அவன்
மனைவி தான் செய்த திருட்டுச்
சுமையைப் பெருமையாகச் சொல்
லிக் கொண்டான். பிராமணனுக்கு
இதைக் கேட்டதும் கடுங் கோ
பம் வந்தது. "அப்
பாவி! உனக்கு எப்போதுமே
பரிசு கொடுப்பவர்களுக்கு
நன்றி செய்யத் தெரியாதா,
இந்தப் பெருமையைச் சொல்லிக்
கொண்டு செல்லும் இந்தப் பணத்
தைக் கொண்டுபோய் மறைத்து
வைத்தாய்?" என்று கேட்டான்.
பிராமணன் மனைவியோ, தனக்குச்
சேர்ந்த அவமானத்தை எண்ணி
மாட்டாமல் உள்ளே சென்று
விட்டாள்.

இதைக் கேட்ட பிராமணனின்
மனைவி மனம் நொந்து
விட்டு வேலைக்காரர்கள் யாராவது ஒரு
தவறு செய்துவிட்டதாகக் கணவன்
மீது நினைத்துக் கொண்டே
இருந்தான். திருடர்கள் பிராமண
னுக்குக் கோபம் வந்து விட்டது.
"என் வீட்டில் ஒரு பெரிய
திருடன் இருக்கிறான்" என்றான்



னைக்கு இல்லாமல் கஷ்டமாகப் போய்விட்டது. இருக்கட்டும். நான் ஏன் இப்படி இவர்கள் கட்டிக்கொண்டு திண்டாடப்போகிறேன்?" என்று அவள் வேதனை யுடன் பேசினாள்.

பிராமணன் கூறிய 'பெரிய துணி' என்ற வார்த்தையை மட்டும் அவள் ஞாபகத்தில் வைத்துக் கொண்டாள். அந்த பெரிய துணி என்பது என்ன வென்று அவளுக்குப் புரிய வில்லை. பிராமணன் வீட்டுக்கு இன்னொரு காரியமாக அவன் வீட்டு வாசலில் போய் நின்றான். "எனக்கும் ஒரு பெரிய துணி வேண்டி யது வந்து இருக்கிறது. என்னை கையில் கிடைத்தால் சொல்லாமல் சுகமாக இருப்பேன்" என்று கதறிக் கொண்டே இருந்தான். இதைப் பக்கத்தில் ஒரு பொம்மைக்காரன் கேட்டு விட்டான். அவன் உடனே கொள்ளும் ஒரு பெரிய பொம்மையைச் செய்து அதைத் தெருவழியாக எடுத்துவந்தான். பிராமணன் வீட்டு வாசலில் நின்று கொண்டு, "பெரிய துணியே, பெரியதுணி - அம்மா பெரிய துணி வேணுமா?" என்று உரத்தகுரலில் கூச்சலிட்டான்.

பிராமணன் மனைவி பெரிய துணியை விலைகொடுத்து வாங்கி அதை பத்திரமாக கட்டிலடியில் வைத்து பூஜை செய்துகொண்டு இருந்தாள். அந்த சமயத்தில் வெளியில் சென்றிருந்த பிராமணன் வீட்டுக்கு வந்தான். அவள் சந்தோஷத்துடன் தான் வாங்கிய பெரிய துணியைக் காட்டினாள்.


அதைப் பார்த்ததும் பிராமணன் வயிறு பற்றி எரிந்தது. "அடியே, எவ்வளவு பொருள் மையை விலைகொடுத்து வாங்கி யிருக்கிறாய்! இனிமேல் என் வீட்டில் இருக்க வேண்டாம். கொண்டு போ, வெளியே" என்று சொல்லி அவளைத் துரத்திவிட்டான். அவள் தன் பெரிய துணியைக் கையிலெடுத்துக் கொண்டு பிறந்தகத்துக்கு கால் நடையாகப் புறப்பட்டாள். அவள் ஒரு

காட்டின் வழியாகப் போகும் போது பொழுது சாய்ந்து விட்டது. காட்டிலே மிருகங்களின் பயம் அதிகம் ஆகையால் அவள் தன் பெரிய தவிலுடன் ஒரு ஆலமரத்தின்மேல் ஏறிக் கொண்டாள். நடு இரவில் சில திருடர்கள் தாங்கள் திருடிய பொருளை அந்த ஆலமரத்தடியில் பங்கிட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த சமயத்தில் பிரமன் மனைவியின் கையிலிருந்த பெரியதவில் 'தொப்' என்று அவர்கள் நடுவில் விழுந்தது. "இதோ பூதம் பிசாசுபோல இருக்கிறது! வாருங்கள் ஓடிவிடலாம்" என்று சொல்லிக் கொண்டே திருடர்கள் 'செத்தோம், பிழைத்தோம்' என்று திரும்பியும் பாராமல் ஓடிவிட்டார்கள்.

பொழுது விடிந்ததும் பிரமன் மனைவி மரத்திலிருந்து இறங்கி, அங்கே கிடந்த பொன் நகைகளை எல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தாள். "போன கழுதை திரும்பவும் எப்படி வந்தது?" என்று பிரமன் ஆச்சரியப்பட்டான்.

"இதோ பாருங்கள், என் பெரிய தவிலின் மகிமை!" என்று சொல்லி அவள் கொண்டு வந்த நகைகளைக் காட்டினாள். பிரமன் அளவு கடந்த மகிழ்ச்சி அடைந்தான். அன்று முதல் இருவரும் ஒற்றுமையாக வாழ்க்கையை நடத்தத் தொடங்கினார்கள்.





கொடை நாட்டை குலசேகரன் என்னும் ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு அநேக வருடங்கள் வரை ஒரு குழந்தையும் பிறக்கவில்லை. அரசன் மிகவும் தாங்கமாட்டாத மனக் கஷ்டத்துடன் இருந்தான்.

அரசன் தன் அரண்மனையில் ஒரு பெண் குதிரையையும், ஒரு பெண் நாயையும் வளர்த்து வந்தான். அரசியும் அவைகளிடத்தில் மிகவும் அன்பாக இருந்து வந்தாள். என்ன காரணமோ, தெரியவில்லை. குதிரைக்கும், நாய்க்கும் கூட ஒரு குட்டியும் பிறக்கவில்லை. அரசனும் அரசியும் அவைகளைப் பார்க்கும்போதெல்லாம் மனக்கலக்கம் அடைந்தார்கள்.

ஒரு நாள் அரசன் தன் சேவகனை அழைத்து, தனக்கும், தன் குதிரைக்கும், தன் நாய்க்கும் குழந்தைகள் பிறக்கும் உபாயத்தைச் சொல்லுகிறவர்களுக்கு, போதுமான செல்வம் திரள் கொடுக்கப்படும் என்று பறை சாற்றுவித்தான்.

இதைக் கேட்டு அநேக வைத்திய சிரேஷ்டர்களும், மந்திரக்காரர்களும், சாமியார்களும் இன்னும் எத்தனையோ பேர்கள் வந்து அவர்களால் இயன்ற மந்திர தந்திரங்களை செய்து பார்த்தார்கள். ஆனால் அவர்களின் மந்திரமும், தந்திரமும் அங்கே ஒன்றும் பலிக்கவில்லை. இதனால் அரசனுக்கு வாழ்க்கையில் மிக வெறுப்பு ஏற்பட்டது.

இப்படி சில காலத்துக்குப் பிறகு அரசனைத் தேடி ஒரு ஆண்டி வந்தான். பிள்ளைகள் பிறக்கும் உபாயத்தைத் தான் சொல்லுவதாக அரசனிடம் கூறினான். அரசனுக்கு சந்நியாசிகளைக் கண்டாலே பிடிக்காது. ஆனாலும் 'எந்தப் புற்றில் எந்தப் பாம்பு

மு. கே. நீலகண்டம், மதுரை



இருக்குமோ? யார் கண்டார்கள்!" என்று நினைத்து, அரசன் சந்நியாசியைத் தக்கவாறு உபசரித்தான்.

சந்நியாசி அரசனை நோக்கி, "அரசே! நான் உனக்கு ஒன்பது மாத்திரைகளைத் தருகிறேன். முதலில் உன் மனைவிக்கு ஒரு மாத்திரையும், குதிரைக்கு ஒரு மாத்திரையும், நாய்க்கு ஒரு மாத்திரையும் கொடுப்பேன். அந்த மாதத்தில் அரசிக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கும். குதிரைக்கு ஒரு குட்டியும், நாய்க்கு ஒரு குட்டியும் கூட பிறக்கும் அதேபோல் இந்த மாத்திரைகளை மூன்று மாதங்களுக்கு மூன்று தடவை யாகத் தங்களுக்கு மூன்று மாத்திரைகள் வீதம் கொடுத்தால், மூன்று மாதங்களுக்குள் மூன்று பேருக்கும் மும்மூன்று குழந்தைகள் பிறக்கும். ஆனால் குழந்தைகள் பிறந்த மூன்று வருடங்கள் சென்றதும் நான் மீண்டும் உன்னைத் தேடி வருவேன். அப்போது நீங்கள் எனக்குத் தங்கள் குழந்தை ஒன்றும், குதிரைக் குட்டி ஒன்றும், நாய்க் குட்டி ஒன்றும் கொடுத்து விடவேண்டும். இதற்கு நீங்கள் சம்மதித்தால் நான் இந்த மாத்திரைகளைத் தங்களிடம் கொடுப்பேன்" என்று சந்நியாசி சொன்னான்.

அரசன் சிறிதுநேரம் யோசித்துப் பார்த்தான். மனதைத் திடப் படுத்திக் கொண்டான். சந்நியாசியைப் பார்த்து, "சுவாமி! அப்படியே ஆகட்டும். தங்கள் இஷ்டப் படியே ஒவ்வொன்றிற்கும் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையைத் தங்களிடமே தந்து விடுகிறேன்" என்றான். சந்நியாசி சந்தோஷத்துடன் அரசனிடம் ஒன்பது மாத்திரைகளைக் கொடுத்து விட்டுச் சென்றான். சந்நியாசி

டு. இப்படி ஒன்பது மாத்திரைகளை மாதத்திற்கு ஒன்று வீதம் மூன்று மாதங்களுக்குள் தினமும் மூன்று மாத்திரைகளைக் கொடுத்தான். அதன் விளைவாக மூன்று மாதங்களுக்குள் ராணிக்கு மூன்று ஆண் குழந்தைகளும், குதிரைக்கு மூன்று குட்டிகளும், நாய்க்கு மூன்று குட்டிகளும் பிறந்தன. அரசனின் சந்தோஷத்திற்கு எல்லையே இல்லாமல் இருந்தது.

இந்த சந்தோஷச் செய்தி ஊரெல்லாம் பரவி விட்டது. குழந்தைகளின் ஜனனவிழாவை வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். அரசன் ஏழை ஏழைகளுக்கும் அன்னதானம், வஸ்திரதானம் முதலியவைகளைச் செய்தான்.

இப்படியாக சில காலம் கழிந்தது. அரச குமாரர்கள் தந்தைப் பேசித் தவழ்ந்து நடக்கும் வயதை அடைந்தனர். மூன்று வருடங்கள் முடியும் சமயம் அது. அரசன் மனதில் திகில் பிடித்துக்கொண்டது. மூன்று வருடங்கள் கழிந்து விட்டால் சந்நியாசி எங்கே வந்து விடப்போகிறானோ என்பதுதான் அவர் பயம்.

இதற்கிடையே குதிரை குட்டிகளும் மிகவும் அழகாக வளர்ந்து



வந்தன. நாய்க் குட்டிகளும் கொழு கொழு வென்று வளர்ந்தன. அரசன் இவைகளை எந்நேரமும் கண்குளிரப் பார்ப்பான். அவனை ஒரு பக்கம் குதிரைகளும், மறுபக்கம் நாய்களும் அரசனைச் சூழ்ந்துகொண்டன.

ராணிக்கும் இதைப்பற்றிதான் ஒரே கவலையாகி விட்டது. "என் அருமைப் புதல்வர்கள் மூவரும் மும்மணிகளைப்போல இருக்கிறார்களே, நான் எப்படி ஒருவனை மட்டும் சந்நியாசிக்குக் கொடுத்து, சந்தோஷமாக இருக்க முடியும்? அதுதான் போகட்டும். அழகான

மூன்று குதிரைக்குட்டிகளில் ஒரு குட்டியை மட்டும் கொடுத்து விட்டால் பெண் குதிரைகள் எவ்வளவு கவலையாக இருக்கும்? இதைப் போன்ற கவலையோடு பெண் யானைகளும் இருக்கும்' என்று ராணி தன் அரண்மனையிலிருந்தபடியே விசித்து விசித்து அழுதாள்.

ஒரு நாள் அரசன் யானைகளை உலாவிக்கொண்டு வரும்போது அவன் குமாரர்கள் மூவரும் கூடவே வந்து அரசன் கையிலிருந்த கயிற்றைப் பிடுங்கிக் கொண்டார்கள். அவர்களுடன் யானைக் குட்டிகளும் பின்தொடர்ந்து வந்தன. அரசன் அவர்களைப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். ஒவ்வொரு குழந்தையும் தோளின்மீது ஏற்றிக்கொண்டு குத்தமிட்டு மகிழ்ந்தனர். அவன் பின்னாலும் யானைக்குட்டிகளை ஏற்றிக்கொண்டு சுற்ற விட்டார்கள். இந்த காட்சியைப் பார்த்த அரசனுக்கு மனதில் ஏதோ ஒரு குழப்பம் உண்டாகி விட்டது. தன்னை அறியாமலேயே கண்களிலிருந்து இரண்டு துளிகள் உருண்டு கொட்டின.

அந்த சமயத்தில் அரசனுடைய சபையிலிருந்த ஞானியொருவர் அவனை நோக்கி 'வீர' என்று அழைத்தார். கொண்டும் காதலும் முறையில் வந்து அவன் மனதை புண்படுத்தி விட்டன.

"என்ன இருந்தாலும் சொன்ன சொல்லை மாற்ற முடியுமா? அப்படி மாற்றினாலும் அந்த மகாராஜா பட்டம் தம்மை விட்டுவிடுவாரா?" என்று எண்ணம் அரசன் மனத்திலேயே பிடித்தபடியே சிந்தித்துக்கொண்டிருந்தான். அந்த சமயத்தை தடுக்க முடியுமா? இப்படியாகவே மூன்று வருடங்களும் பூர்த்தியாகி விட்டன.

(தொடரும்)





அம்புலிமாமா

குறுக்கெழுத்துப் போட்டி

(அறிவின் வளர்ச்சிக்கு)

குறிப்புகள்

இடமிருந்து வலம்

1. [illegible]

4. [illegible]

6. [illegible]

8. [illegible]

10. [illegible]

11. [illegible]

12. [illegible]

14. [illegible]

16. [illegible]

17. [illegible]

18. [illegible]



மேலிருந்து கீழ்

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

5. [illegible]

7. [illegible]

8. [illegible]

9. [illegible]

13. [illegible]

14. [illegible]

15. [illegible]

17. [illegible]



குழந்தைத் தாலாட்டு

[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]

[illegible]

கர்ணம் முத்துசாமி

சிவபுரி என்னும் ஊரில் முத்து சாமி என்பவர் "கிராம கர்ணம்" வேலை பார்த்து வந்தார். கிராமத்து ஜனங்களும் பெருந் போக்கல்தார்களும் முத்துசாமியை, "ஏ! கர்ணம்! ஏ! கர்ணம்!" என்று அழைத்தார்கள். 'நம்மை எவர் பார்த்தாலும் ஏ! கர்ணம் ஏ! கர்ணம் என்று இழிவாகக் கூப்பிடு கிறார்கள். இனிமேல் மதிப்பே கிடையாது' என அவர் யோசித் தார். 'கர்ணம் வேலையை ராஜி னாமா செய்து விட்டு வேறு தொழில் செய்யலாம். சமையல் வேலை புரிந்தால் வருமானமும் தாராளமாகக் கிடைக்கும், நன்றாகச் சாப்பிடலாம்' என்று நினைத்து, அந்த ஊரில் பணக் காரரான நாராயணன் என்பவ ரிடம் சமையல் வேலைக்கு அமர்ந் தார்.

சிலநாள் சென்றதும் அவ்வூரில் சங்கரனார் வீட்டு கல்யாணத் துக்கு சமையல் செய்யும்படி, முத்துசாமியை அழைத்தார்கள். முத்துசாமியும் தன்னுடைய சகாக்களுடன் சமையல் வேலைக்கு அமர்ந்தார். முத்து சாமியும் கோகர்ணம் என்ற கொண்டைப்பூமை ஒருகு வைத்து நகருக் கட்டில் சரி பரிமாறி னர். பந்தியில் சாப்பிட்ட ஒருவர் "ஏ! கோகர்ணம்! இங்கு சரி கொண்டுவா" என்று அழைத் தார்.

பார்த்தார் முத்துசாமி! வந்தது கோபம்! "அடடா! போதும்! போதும்!! ஏ, கர்ணம் போய், கோகர்ணம்! வந்ததா!" என நினைத்தபடியே அந்த வேலையை விட்டுவிட்டார். வேறு என்ன வேலை செய்யலாம் என யோசித்து, மல்யுத்தப்பயிற்சி செய்தால் நல்லவருமானம் கிடைக்கும், ஜெயமும் உண்டு எனத் தீர்மா னித்துக்கொண்டார்.

இராமநாதபுரியில் மல்யுத்தத் தில் கைதேர்ந்து, பரிசு பெற்ற ஜெயசிம்மன் என்பவரிடம் சென்று தன்னை சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டார். அவரும் அங்கங்களையெல்லாம் சோதித்துப் பார்த்து முத்து சாமியை மல்யுத்தப் பயிற்சிக்கு ஏற்றுக் கொண்டார். சிலநாள் சென்றன. விருந்து, முத்துசாமி

எஸ். கே. ரகுநாதன், அருப்புக்கோட்டை



யைப் பார்த்து குட்டிகர்வம் போட்டுக்கொண்டுள் அழுக்கு அடங்கவில்லை! எனது செல்வமும் கர்வம் நம்மை விட்டுப் போகி றது! வெறும் கர்வம் போய், கொக்கர்வம் வந்தது, இப் போது குட்டிக்கர்வமாக விட் டது!' என கூறினார். வேறு சிலர் வெகுமானங்கள் வந் தபோதிலும், வைக்கத் தெரியவில் லை என்று நினை த்து, தன் சொத்துக்களையெல்லாம் வைத்துக்கொண்டே பார்த்தான்.

அவருடைய வைதீக சிரேஷ்டர் ஒருவர் பிரசங்கம் கேட்க முதலியாரிடம் வந்து, "இன்றுமுதல் நமது இதயத் தில் எவ்வித கர்வமும் அடக்கப் போகிறது. வரவேணுமே" என்று சொன்னார். முதலியாருக்கு என்ன செய்வதென்று புரிய வில்லை.

வெறும் கர்வம் கொக்கர்வம் ஆகி, பின்பு குட்டிக்கர்வம் என்றுமாகி, இப்போது கலையுடன் கர்வம் என்று வளர்ந்தது! இதைக் கேள்விப்பட்டதும் ஒன்றும் தெரியாமல் விருந்தினர்க்குச் சென்று. அர் ஒருவன் என்பவனிடம் காவியம், சாஸ்திரம், தர்க்கம் முதலியவை களைப் படித்து சகல சாஸ்திர பண்டிதனென்னும் பெரும் வித்து வத்தார். இதைக் கேள்விப்பட்டு இவனிடம் பொறாமை கொண்ட சதுரஸ்திரியார் இவனிடம் வந்து 'உமது வியாகர்ணம் தெரி, யுமா?" என்று கேட்டார். தமது முத்திரையிக்கு வந்து விட்டது போலும் "நாம் கற்றதை விட் டாலும், கர்வம் நம்மை விடாது போலிருக்கிறதே! அப்பப்பா வெறும் கர்வம்! கொக்கர்வம்! குட்டிக்கர்வம்! கலையுடன் கர்வம்! வியாகர்ணம்!! என வாம் கர்வமயமான்! என்ன செய்வேனோ?" என கூறிக் கொண்டே கடந்து சென்றால் கர்வமற்றவனாகச் செய்தார். அவரும் அவருக்குக் 'கும்ப கர்ணன்' ஆகட் டுமென்றார்! என்ன செய்வார் பாவம்? பழைய கர்வம் கொண்டே போன என கிறார்த்து, வெகுநாளுக்குச் சென்று இரவுகளைக் கேலி செய்து வந் தார்! அன்று முதல் யாவரும் "கமலகர்வம்" என்றே அவரை அழைத்தார்கள்.






பாலகர்களே!

படத்தின் மத்தியில் உள்ள ஒரு கோட்டைக்குச் செல்ல வழி தெரியாமல் நான்கு மாடுகளும் தவிக்கின்றன. ஆனால் ஒரு மாட்டுக்குத்தான் அந்த கோட்டை முடியும். அந்த மாடு எது என்பதைக் கண்டுபிடிக்க முடியுமா?

19-ம் பக்கத்தின் புதிர்ச் சொற்களின் விடை :—3, 6 எண்களுள்ள பொருள்கள் ஒரே விதமானவை, மற்ற ஆறு பொருள்கள் ஒரு விதமானவையாக இருக்கின்றன.

சென்ற மாதத்து வார்த்தை விளையாட்டு-2ன் விடை :—

1. மண் எண்ணெய்
2. பூமண்டலம்
3. கரிமண் பூமி
4. அரிசி மண்டி
5. வண்டல் மண்



மூன்று சித்திரக்காரர்கள்

[illegible]

ஒரு ஊரில் மூன்று சித்திரக்காரர்கள் மிகவும் வல்லவர்களாக இருந்தனர். அவர்கள் அவ்வூர் அரசனிடம் சென்று தங்கள் திறமையைக் காண்பிக்க எண்ணினர். முதல் வல்லவன் ஒரு பூச்செண்டையும், இரண்டாம் வல்லவன் ஒரு பழக்கூடையும், மூன்றாம் வல்லவன் ஒரு திரையும் சுவற்றில் வரைந்தனர். அரசனும் அப்போது தான் அங்கே வந்தான்.

ஒரு தேனீ பூச்செண்டைப் பார்த்து அதனை தேன் உண்பதற்காக வந்து அமர்ந்தது. ஒரு ஈ பழக்கூடையில் இருப்பது உண்மையின் பழங்கள் என்று எண்ணி அதைக் கொத்தித் தின்ன முயன்று அமர்ந்தது.

அரசன் ஆச்சரியத்துடன் மூன்றாவது படம் எங்கே போய் விட்டது என்று சொல்லிக் கொண்டே திரையை எடுத்துப் பார்க்க முயன்றான். ஆனால் அவனுக்கு அப்போது தான் அது திரையின் படம் என்று ஞாபகம் வந்தது. தான் உண்மையிலேயே திரை என்று நினைத்து ஏமாந்ததால் மூன்றாவது சித்திரக்காரனுக்கு மட்டும் அதிக வெகுமதியினைக் கொடுத்து அனுப்பினான்.

வார்த்தை விளையாட்டு - (3)

கீழ்க்கண்ட சதுரத்தை கீழே கொடுத்திருக்கும் வாக்கியங்களின் உதவியோடு பூர்த்தி செய்யுங்கள் பார்க்கலாம்.

1	அ	ன			
2		அ	ன		
3			அ	ன	
4				அ	ன

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible] .... [illegible]

[illegible]

போட்டியின் சரியான விடை

	ப	ர	தே	சி		
	த	வி		சு	வா	தி
நா	ம்		சே		தி	ரு
ற		கு	ன்	று		ம
ப	தி		லை		தூ	ஷ
கு	ற	ளி		பா	டு	
		தி	ர	வ	ம்	



டோங்கரேயின்

பாலாம்ருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு நல்ல பலமளிக்கும். பல் முளைக்கும் போது ஏற்படும் கோளாறுகளை தடுத்து தேக ஆரோக்கியத்தையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும்.

K. T. Dongre & Co. Bombay—4

அம்புலிமாமா

(பாலர் மாதப் பத்திரிகை)

சந்தா விபரம்

1 வருடத்திற்கு - ரூ 5/-

2 வருடங்களுக்கு - ரூ 9/-

உங்கள் சந்தாவை உடனே மணியார்டர் மூலம் கீழ்க் குறித்த விலாசத்திற்கு அனுப்புங்கள். ஆறுமாத சந்தா கிடையாது.

மானேஜர்,

அம்புலிமாமா காரியாலயம்

P. B. No. 1686, சென்னை—1

ஏஜண்டுகள் தேவை

கீழ்க் குறிப்பிட்ட இடங்களில் எமது அம்புலிமாமாவை விற்பதற்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை!

கும்பகோணம்	ஸ்ரீவைகுண்டம்
கோபிசெட்டிபாளையம்	இராமநாதபுரம்
திருவண்ணாமலை	பழனி
விருதாசலம்	சிவகங்கை
கொடைக்கானல்	அருப்புக்கோட்டை
கொச்சின்	காஞ்சீபுரம்
கோவில்பட்டி	தனுஷ்கோடி

ஏஜென்ஸி விபரங்களுக்கு உடனே எழுதவும்.

மானேஜர்:

அம்புலிமாமா காரியாலயம்,

போஸ்ட் பாக்ஸ் நெ. 1686, சென்னை-1

ஆந்திரஜோதி

தெலுங்கில் வெளிவரும் பிரபலமான
இணையற்ற தேசிய மாதப் பத்திரிகை.

●

உயர்ந்த நோக்கங்களைக் கொண்டது. அறிஞர்களது ஆதரவைப்பெற்றது. நல்ல செல்வாக்கையும் உடையது. காந்திஜியின் உன்னத தத்துவங்களையும் காங்கிரஸின் பரந்த காரியக் கொள்கைகளையும் ஆந்திர மக்களிடையே பரப்பி நம் இந்திய தேசத்தின் முன்னேற்றத்துக்காகத் தன் சேவையை அர்ப்பணம் செய்து வருகிறது.

பத்திரிகை தோன்றியது முதற்கொண்டே, தமிழ், தெலுங்கு, கன்னடம் இந்தச் சகோதரங்களின் ஒற்றுமையையும் இதர மாகாணங்களின் கூட்டுறவையும் பிரசாரம் செய்து கொண்டு வருகிறது. ...

நல்ல வர்ணப்படங்கள், சிறந்த கட்டுரைகள், உயர்ந்த கதைகள், ஹாஸ்யம் ததும்பும் வாழ்க்கைச்சித்திரங்கள் இவை அனைத்தும் தாங்கிவரும் தெலுங்குப் பத்திரிகைகளில் சிறந்தது.

●

விளம்பரத்துக்கு ஏற்ற சாதனம் ஆந்திரஜோதியே!

விவரங்களுக்கு:

மானேஜர்,

ஆந்திரஜோதி காரியாலயம்

போஸ்ட் பாக்ஸ் நம்பர் 1686, சென்னை.



Ambulimama, August '48 *Photo by V. H. Rao*

வீர பாலன்



அம்புலிமாமா பழமொழிகள் - 2

பிள்ளைகள் பெற்றோருக்குப் பிடித்தம்!
அம்புலிமாமா எல்லோருக்கும் பிடித்தம்!!